DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C.No.10/2022 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W.3 |
| Name | :கருப்பசாமி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.08.2023

-----

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை:**

நான் குருவிளாம்பட்டியில் குடியிருக்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும். 25.04.2021-ம் தேதி என்னுடைய தகப்பனார் சாட்சி 1 சாமிராஜ் திண்டுக்கல்லில் இருந்து இரவு 10.00 மணியளவில் வீட்டிற்கு வந்தார். பின்பு மறு நாள் காலை 9.00 மணியளவில் எதிரி இராஜாவிற்கு பணம் கொடுக்க வேண்டும் என்பதற்காக எனது அப்பா நாங்கள் கட்டும் புது வீட்டிற்கு அவரை வரச்சொன்னார். பிறகு எனது அப்பா அவரை கூப்பிட்டு பணத்தை வாங்கச்சொன்னார். அவரை கேட்காமல் சண்டை போட்டு சென்று விட்டார். பின் என் அப்பா அவர் பின்னாடி சென்றார். அங்கு சமத்துவபுரம் அருகில் உள்ள ஒர்க்ஷாப்பில் நின்று கொண்டிருந்தார்.

எதிரி என் அப்பாவை பார்த்து நீ உயிருடன் இருந்தால் உன் மனைவியிடம் பேச முடியாது என்று கூறி கையில் இருந்த அருவாளால் கழுத்தை பார்த்து வெட்டினார் எனது அப்பா இடது கையால் தடுத்த போது இடது கையில் வெட்டு பட்டு காயம் ஏற்பட்டது எதிரி மீண்டும் அருவாளால் வெட்டவே மீண்டும் கையால் தடுத்த போது அந்த வெட்டு லேசாக என் அப்பாவின் மூக்கு பகுதியில் கட்டு காயத்தை ஏற்படுத்தியது. மேற்படி சம்பவத்தை நானும், எனது மாமா பார்த்திபன், தங்கமலை, எனது பாட்டி மற்றும் பலர் நேரடியாக பார்த்தோம். எதிரி என் அப்பாவை வெட்ட பயன்படுத்திய அருவாளை பார்த்தால் என்னால் அடையாளம் காட்டமுடியும் காட்டப்படும் அருவாள் எதிரி என் தகப்பனாரை வெட்ட பயன்படுத்தியது தான் அது சா.பொ.1.ஆகும். காயம்பட்ட எனது தகப்பனாரை நான், என் தாயார், என் மாமா ஆகியோர்கள் போக்கு ஆட்டோவில் உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தோம். காயம் அதிகமாக இருந்ததால் அங்கிருந்து மீனாட்சி மிஷன் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். உசிலம்பட்டி போலிசார் மேற்படி மருத்துவமனைக்கு வந்து என்னை விசாரித்தார்கள். எனது தாயார் மற்றும் எனது மாமாவை விசாரித்தார்கள். மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது என் தகப்பனால் புகார் வாக்குமூலம் கொடுத்தார். காட்டப்படும் புகார் வாக்குமூலம் என் தகப்பனார் கொடுத்தது தான். மேற்படி புகார் வாக்குமூலத்தில் என் மாமா தங்கமலை

அறிவேன் சாட்சியாக கையெழுத்து செய்தார். போலிசார் என்னை விசாரணை செய்த போது நான் தற்போது சாட்சியம் அளித்தது போல் தான் கூறியுள்ளேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

வழக்கு சம்மந்தமாக காவல் துறையினர் சம்மன் கொடுத்த போது தான் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல அதற்கு முன்பே போலிசார் விசாரணையின் போதே சொல்லியுள்ளேன். எதிரியை பணம் வாங்குவதற்கு என் அப்பா அழைத்தார் என்றால் சரிதான். அப்போது காலை 9.00 மணி இருக்கும். பணம் ரூ.40,000/- எனது தகப்பனார் எதிரிக்கு கொடுக்க வேண்டி இருந்தது. அப்பொழுது என் அப்பா என்ன செய்தார் என்றால் எதிரி என் அம்மாவுடன் தொடர்பில் இருந்ததை அறிந்து சத்தம் போட்டார். எனது அப்பாவுக்கு எதிரியுடன் முன் விரோதம் இருந்ததா என்றால் அவ்வப்போது குடிக்கும் போது சண்டை போடுவார்கள். எனது அப்பா சத்தம் போட்டவுடன் எதிரி அங்கிருந்து அருவாளை காண்பித்து விட்டு பைக்கில் சென்றார். அப்போது என் தகப்பனார் எதற்காக பின்னால் சென்றார் என்றால் கொடுக்கவேண்டிய பணத்தை திரும்ப கொடுப்பதற்காக பின்னால் நடந்து சென்றார். நாங்கள் புதிதாக கட்டும் வீட்டிற்கும், சம்பவ இடத்திற்கும் சுமார் 1/2 கி.மீ தொலைவு இருக்கும். அப்பா நடந்து போகும் பொழுது சண்டையாகும் என்பதல் நான் பின்னால் நடந்து சென்றேன். எதிரி என் அப்பாவை வெட்டியதை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி எந்த பக்கம் இருந்து வந்தார்

என்றால் எதிரி பேரையூர் ரோட்டில் கணேஷ் ஒர்க் ஷாப்புக்கு முன்பாக நின்று கொண்டிருந்தார். மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் வைத்து தான் போலிசார் என்னை விசாரித்தார்கள். மேற்படி மருத்துவமனையில் எனது தகப்பனார் வாய்மொழியாக புகார் வாக்குமூலம் கொடுத்தார். புகார் வாக்குமூலம் அவசர சிகிச்சை பிரிவில் வைத்து கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு போலிசார் வந்தார்கள். காயம்பட்ட எனது அப்பாவை போக்கு ஆட்டோவில் மருத்துவமனைக்கு அழைத்து வந்தோம். இந்த வழக்கிற்காக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை: இல்லை.**

/*sd*/Thiru.P.S.ரஸ்கின் ராஜ்,10.8.2023

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.

/உண்மை நகல்/

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.